DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF ADDITIONAL DISTRICT AND SESSIONS,
(FAST TRACK COURT), KUMBAKONAM

| | | |
|---|---|---|
| S.C. No. | : | 264/2019 |
| Deposition of witness | : | PW-15 |
| Name | : | க.தமிழ்மணி |
| Father's /Husband Name | : | |
| Village/Town | : | |
| Taluk | : | |
| Age | : | |
| Occupation | : | மருத்துவர் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 06th day of December 2022. 06-12-2022

**முதல் விசாரணை**

நான் தற்போது புதுக்கோட்டை மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் இணை பேராசிரியர் மற்றும் துறை தலைவராக பணிபுரிகிறேன். இதற்கு முன்பு தஞ்சாவூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் 06/06/2019 ஆம் தேதி சட்டம் சார்ந்த மருத்துவ துறையில் துணை பேராசிரியராக பணிபுரிந்த போது, அம்மாபேட்டை காவல் நிலைய குற்ற எண் 208/2019 வழக்கில் தொடர்புடைய 19 வயது மதிக்கத்தக்க நந்தகோபால் என்ற ஆண் பிரேதத்தை பரிசோதனை செய்வதற்காக வேண்டு கோள் கடிதம் மதியம் 1.10 மணியளவில் தலைமை காவலர் எண் 2893 உதயன் என்பவர் மூலமாக பெற்று, அவர் பிரேத அடையாளம் காட்டினார். பின்னர் அன்று மதியம் 1.20 மணிக்கு பிரேத பரிசோதனை துவங்கினேன். அப்பொழுது பிரேதம் மிதமான உடல் வாகுடன், உடல் முழுவதும் பிண விரைப்பு தன்மையுடன் காணப்பட்டது. கை, கால் நகங்கள் வெளிரிய நிலையில் இருந்தது. உடல் முழுவதும் காய்ந்த மணல் மற்றும் மண் ஒட்டியிருந்தது. இடது கண் பகுதியில் எறும்பு கடித்த அடையாளம் இருந்தது. நெஞ்சின் நடுப்பகுதியில் செங்குத்தான பழைய ஆறிய காயத்தின் அளவு 12x0.5 cm அளவில் காணப்பட்டது.

இறப்பிற்கு முன் ஏற்பட்ட காயங்கள். 1) சிராயப்பு காயங்கள் சிகப்பு நிறத்தில் கீழ்கண்ட உடல் பாகத்தில் காணப்பட்டன. 3x2cm அளவில் வலது தொடையின் வெளிப்பகுதியிலும், 4x2cm அளவில் வலது கணுக்காலின் வெளிப்பகுதியிலும், 1x1cm அளவில் இடது கண்ணின் வெளிப்புற பகுதியிலும், .5x.5cm அளவில் கழுத்தின் முன்பகுதியின் நடுப்பகுதியிலும் மற்றும் .5x.5 cm அளவில் இடது கண் புறவத்தின் வெளிபகுதியிலும் காணப்பட்டன. 2) சிராய்ப்புடன் கூடிய கன்றிய காயம் சிகப்பு நிறத்தில் இடது கண்புறவத்தில் காணப்பட்டது. மேலும் கண் விழித்திறையில் ரத்தம் காணப்பட்டது. கன்றிய காயங்கள் 6x4cm அளவில் வலது பக்க நெஞ்சில் முன் பகுதியிலும், 4x2cm, 7x3cm அளவிலான இடது பக்க வெளிப்புற வயிற்று பகுதியில் காணப்பட்டது மற்றும் 4x3cm அளவில் வயிற்றின் கீழ் பகுதியில் காணப்பட்டது. நெஞ்சு பகுதியை திறந்து பார்த்ததில், மார்பு கூட்டின் முன் மற்றும் பின்பகுதி முழுவதும் கன்றிபோய் காணப்பட்டது. வலது பக்க மார் கூட்டின் எலும்புகள் 2 முதல் 4 வரை அதன் வெளிப்புற பகுதியில் உடைந்து காணப்பட்டது. இரண்டு நுரையீரல்களும் கன்றிபோய் காணப்பட்டது. அதனை அறுத்து பார்க்கையில் ரத்தம் தோய்ந்து, ரத்தத்துடன் கலந்த நுரையீரல் காணப்பட்டது. வலது பாக்க மார்பு கூட்டின் உட்பகுதி கன்றிபோய் காணப்பட்டது. மார்பு கூட்டில் 800 மிலி அளவு திரவ ரத்தமும், 150 கிராம் அளவில் உறைந்த ரத்தமும் காணப்பட்டது. வயிற்று பகுதியை திறந்து பார்க்கையில், வயிற்று பகுதியின் உள்பகுதியில் உள்ள தசைகள், கொழுப்பு பகுதிகள் கன்றிபோய் காணப்பட்டது. வயிற்று பகுதி உட்பகுதியில் உள்ள தசைகள் மற்றும் உறுப்புகள் வலது பக்க கல்லீரல், சிறுநீர்ப்பை, மார்புகள் மற்றும் ஆசனவாய் ஆகியவை கன்றிபோய் காணப்பட்டது. கனயத்தை சுற்றி ரத்த கசிவுகள் காணப்பட்டது. அதனை அறுத்து பார்க்கையில் அதன் உட்பகுதியில் ரத்தம் வழிந்த நிலையில் காணப்பட்டது. வயிற்று பகுதியில் 500 மிலி அளவு திரவ ரத்தம் மற்றும் 220 கிராம் அளவு உறைந்த ரத்தம் காணப்பட்டது. இதயத்தை சுற்றியுள்ள உறையானது இதயத்துடன் ஒட்டி காணப்பட்டது. இதயத்தை திறந்து

பார்க்கையில் இரண்டு ஏட்றியல் அறைகளுக்கு இடையே உள்ள சுயற்சி 3 செமீ அளவு தையிலடப்பட்ட பழைய காயம் காணப்பட்டது. இதயத்தின் இரத்த குழாய்கள் மற்றும் தமனி, சிரை ஆகியவை நல்ல நிலையில் காணப்பட்டது. மூச்சுக்குழாய் மற்றும் குரல் வளை நல்ல நிலையில் இருந்தது. நாவடி எலும்பு நல்ல நிலையில் இருந்தது. இரைப்பையில் 200 மில்லி அளவு பழுப்பு நிற திரவத்துடன் பகுதியளவு செறித்த சமைத்த உணவு பொருள் காணப்பட்டது. அதில் இருந்து அழுகிய பழ வாடை வீசியது. அதன் உட்சவ்வு வெளிரியிருந்தது. நுரையீரல், கல்லீரல் மற்றும் கணையம் மேற்சொன்னவாறு காணப்பட்டது. மண்ணீரல் மற்றும் சீறுநீரகங்கள் இயல்பான நிலையில் காணப்பட்டது. அதன் குறுக்கு வெட்டு தோற்றத்தில் சிறுகுடலில் 20 மில்லி அளவு பித்த திரவம் காணப்பட்டது. வாடை எதுவுமில்லை. உட்சவ்வு வெளிரியிருந்தது. சிறுநீர் பையில் 5 மில்லி அளவு சீறுநீர் காணப்பட்டது. மூளை இயல்பான நிலையிலும், அதன் குறுக்கு வெட்டு தோற்றத்தில் வெளிரியும் காணப்பட்டது. முதுகு தண்டுவட எலும்பு நல்ல நிலையில் காணப்பட்டது. இறப்பானது பிரேத பரிசோதனைக்கு முன்பு 12 மணி நேரத்தில் இருந்து 24 மணி நேரத்த்திற்குள் ஏற்பட்டிருக்கக்கூடும். உடல் உள்ளுறுப்புகள் இரசாயன பகுப்பாய்விற்காக அனுப்பி வைக்கப்பட்டது. இரசாயன பகுப்பாய்வு அறிக்கையில் எத்தில் ஆல்கஹால் உடல் உள்ளுறுப்புகளில் கண்டுபிடிக்கப்பட்டதாக குறிப்பிடப்பட்டிருந்தது. இறப்பிற்கான காரணம் இறந்தவர் அவருக்கு ஏற்பட்ட பல்வேறு காயங்களின் பின் விளைவுகளினால், பல்வேறு முக்கிய உறுப்புகளில் அடிப்பட்டு இறந்திருக்கக்கூடும் என்று கருத்துரை வழங்கி சான்றளித்துள்ளேன். நான் வழங்கிய பிரேத பரிசோதனை சான்று 2 எண்ணிக்கை **அ.சா.ஆ.10 வரிசையாகும்.**

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:**

மேற்படி உடலின் இருதயத்தை பார்த்த போது அவருக்கு முன்பு இதயத்தில் அறுவை சிகிச்சை நடந்ததற்கான காயத்தழும்பு காணப்பட்டது.

இறந்த உடலில் சேறு இருந்ததாக குறிப்பிடவில்லை. ரசாயன பரிசோதனையின் படி இரத்தத்தில் 109 மிகி w/v அளவு மிதமிஞ்சிய மது போதையில் இருந்திருக்கலாம் என்றால் அவர் மதுபோதையில் இருந்ததற்கான வாய்ப்புகள் உண்டு. பிரேதத்தின் இடது கண்ணில் எறும்பு கடித்த காயம் இருந்ததால் பிரேதம் சிலமணி நேரம் கவனிப்பார் அற்று கிடந்தது என்று சொல்லலாம் என்றால் அதற்கு வாய்ப்புகள் மிகவும் குறைவு. காயம்பட்ட நபரை காயம்பட்ட இடத்தில் இருந்து உடனே அப்புற படித்தியிருந்தால் எறும்பு கடித்து காயம் ஏற்பட வாய்ப்பு இல்லை என்றால் அது அந்த நபர் கிடந்த இடத்தையும், நேரத்தையும் பொறுத்தது. வலது தொடையின் வலது பக்கத்தில் வெளிப்பகுதியில் சிராய்ப்பு காயம் காணப்பட்டது. ஆண்டிரியர் என்றால் உடல் பாகத்தின் முன் பக்கம் என்றும், போஸ்டிரியர் என்றால் உடல் பாகத்தின் பின் பக்கம் என்று கருதப்படும். இறந்து போன நபருக்கு எறும்பு கடித்த காயம் இருந்ததால் அவருடைய உடல் கவனிப்பார் அற்று வெகு நேரம் அங்கேயே கிடந்தது என்றும் நான் அரசு தரப்பிற்கு ஆதரவாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

ஒப்பம்(xxxxxx)

Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him/her to be Correct.

ஒப்பம்(xxxxxx)
Additional District Judge,
Fast Track Court, Kumbakonam.

**/உண்மை நகல்/**
ஒப்பம்(xxxxxx)
Additional District Judge,
Fast Track Court, Kumbakonam.

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF ADDITIONAL DISTRICT AND SESSIONS,
(FAST TRACK COURT), KUMBAKONAM

| | | |
|---|---|---|
| S.C. No. | : | 264/2019 |
| Deposition of witness | : | PW-14 |
| Name | : | கோபிநாத் |
| Father's /Husband Name | : | |
| Village/Town | : | |
| Taluk | : | |
| Age | : | |
| Occupation | : | மருத்துவர் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 06th day of December 2022. 06-12-2022

**முதல் விசாரணை**

நான் தற்போது தஞ்சாவூர் மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் உதவி மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். 06/06/2019 ஆம் தேதி 12.39 மணிக்கு அறுவை சிகிச்சை பிரிவில் பணியில் இருந்த போது, கோபிநாத் என்பவர் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு, மேல் சிகிச்சை வழங்கப்பட்டு, காயச்சான்றிதழ் கொடுக்கப்பட்டது. அவருக்கு இடது நெஞ்சு பகுதியில் வலியிருந்தது. நெஞ்சு பகுதியில் எடுக்கப்பட்ட CT Scan இல் எலும்பு முறிவு எதுவுமில்லை என்று அறிக்கை பெறப்பட்டது. எக்ஸ்ரேவில் இடது மற்றும் வலது தோள் பட்டையில் எலும்பு முறிவு இல்லை. இடது முட்டியில் மற்றும் இடுப்பு எலும்பில் எடுக்கப்பட்ட எக்ஸ்ரேவில் எலும்பு முறிவு ஏதும் இல்லை. அதில் அவருக்கு ஏற்பட்ட காயம் சொற்பகாயம் என்று சான்று வழங்கியுள்ளேன். நான் வழங்கிய காயச்சான்று **அ.சா.ஆ.9 ஆகும்.** இது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரனை:**

போலிசார் என்னை எப்போது எங்கு வைத்து விசாரித்தார்கள் என்று ஞாபகமில்லை. போலிசார் என்னை விசாரித்த போது ஆயுதங்கள் எதையும்

**காட்டி விசாரிக்கவில்லை என்றால் சரிதான். மரக்கட்டையால் 4 நபர்கள் வேகமாக ஒரு நபரை அடிக்கும் போது அந்த நபருக்கு வெளிகாயங்கள் ஏற்பட வாய்ப்புண்டு. சதை பகுதியில் அடித்தால் வீக்க காயமும், எலும்பு பகுதியில் அடித்தால் சராய்ப்பு காயமும் ஏற்படும் என்றால் சரிதான்.**

ஒப்பம்(xxxxxx)

Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him/her to be Correct.

ஒப்பம்(xxxxxx)
Additional District Judge,
Fast Track Court, Kumbakonam.

**/உண்மை நகல்/**
ஒப்பம்(xxxxxx)
Additional District Judge,
Fast Track Court, Kumbakonam.

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF ADDITIONAL DISTRICT AND SESSIONS,
(FAST TRACK COURT), KUMBAKONAM

| | | |
|---|---|---|
| S.C. No. | : | 264/2019 |
| Deposition of witness | : | PW-13 |
| Name | : | ஆர்.புவனேஸ்வரி |
| Father's /Husband Name | : | |
| Village/Town | : | |
| Taluk | : | |
| Age | : | 60 |
| Occupation | : | மருத்துவர் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 06th day of December 2022. 06-12-2022

**முதல் விசாரணை**

நான் தற்போது தஞ்சாவூர் மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் அவசர சிகிச்சைபிரிவில் குடிநிலை மருத்துவராக பணிபுரிந்து பணி ஓய்வு பெற்றுவிட்டேன். 06/06/2019 ஆம் தேதி பணியில் இருந்த போது, பகல் 12.40 மணியளவில் கோபிநாத் த/பெ ரெங்கசாமி கீழ ஆதிதிராவிடர் தெரு, குளிச்சப்பட்டு என்ற முகவரியில் உள்ள நபரை அவரது உறவினர் சுரேந்தர் என்பவர் மூலமாக அவசரசிகிச்சை பிரிவிற்கு கொண்டுவரப்பட்டார். நான் அவரை விசாரித்த போது 05/06/2019 ஆம் தேதி அதிகாலை 12 மணியளவில் மேற்சொன்ன முகவரியில் உள்ள தனது வீட்டிற்கு அருகில் உள்ள குழாய் அடியில் அடையாளம் தெரிந்த 6 நபர்கள் (5 ஆண், 1 பெண்) மரக்கட்டையால் தன்னை தாக்கி காயம் ஏற்பட்டதாக தானே கூறினார். அவரது காயத்தை பரிசோதிக்கும் போது, வலியும், தொடு வலியும் பின் மண்டையில் இடது பக்கத்தில் இருந்தது. 2) வலி மற்றும் தொடு வலி இடது தோள் பட்டையிலும், பின்பக்க இடுப்பு பகுதியிலும், இடது தொடையிலும் இருந்ததாக கூறினார். ஒரு சிராய்ப்பு காயம் 1x1cm அளவில் வலது இடுப்பு பகுதியில் இருந்தது. அவரை பரிசோதிக்கும் போது சுயநினைவுடன், நாடி துடிப்பு ரத்த அழுத்தம் சீராக

காணப்பட்டது. அவரை உடனடி சிகிச்சைக்காக அறுவை சிகிச்சை பிரிவில் உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டார். அவருடைய காயம் குறித்து நான் வழங்கிய விபத்து பதிவேட்டு நகல் **அ.சா.ஆ. 8 ஆகும்.**

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரனை:**

காயம்பட்ட நபர் காவல் துறை குறிப்பாணையுடன் சிகிச்சை வரவில்லை என்றால் சரிதான். நந்தகோபாலுக்கு ஏற்பட்ட 3 வது சிராய்ப்பு காயம் ஒருவருக்கொருவர் தள்ளிக்கொள்ளும் போது நகம் பட்டால் ஏற்பட வாய்ப்புண்டு. மேற்கண்ட நபருக்கு இருந்த வலி மருத்துவ ரீதியாக காணமுடியாது. ஒரு நபர் வலியோ, தொடு வலியோ இருப்பதாக பொய்யாக பாசாங்கும் செய்யலாம் என்றால் சரிதான். விபத்து பதிவேட்டு நகலில் உள்ள வாசகங்கள் என்னால் எழுதப்படவில்லை. தேதி 5 என்று எழுதப்பட்டுள்ளதில் திருத்தம் உள்ளது என்றால் சரிதான்.

**நீதிமன்ற கேள்வி**

விபத்து பதிவேட்டில் உள்ள வாசகங்களை யார் எழுதினார்?

விபத்து பதிவேட்டில் உள்ள வாசகங்களை பயிற்சி மருத்துவர் நான் நோயாளியை பரிசோதனை செய்து, நான் சொல்ல சொல்ல எழுதினார்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

நான் காயம்பட்ட நபரை பார்க்கவேயில்லை என்றும் பயிற்சி மருத்துவர் எழுதி வைத்த விபத்து பதிவேட்டு நகலில் நான் கையெழுத்து போட்டேன் என்றால் சரியல்ல.

ஒப்பம்(xxxxxx)

Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him/her to be Correct.

ஒப்பம்(xxxxxx)
Additional District Judge,
Fast Track Court, Kumbakonam.

**/உண்மை நகல்/**
ஒப்பம்(xxxxxx)
Additional District Judge,
Fast Track Court, Kumbakonam.

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF ADDITIONAL DISTRICT AND SESSIONS,
(FAST TRACK COURT), KUMBAKONAM

| | | |
|---|---|---|
| S.C. No. | : | 264/2019 |
| Deposition of witness | : | PW-12 |
| Name | : | ஆர்.செந்தில்குமார் |
| Father’s /Husband Name | : | ராமசாமி |
| Village/Town | : | |
| Taluk | : | |
| Age | : | |
| Occupation | : | மருத்துவர் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 06th day of December 2022. 06-12-2022

**முதல் விசாரணை**

நான் தற்போது தஞ்சாவூர் மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் அவசர சிகிச்சைபிரிவில் மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பு 06/06/2019 தஞ்சாவூர் மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் அவசர சிகிச்சை பிரிவில் மருத்துவராக பணிபுரிந்த போது, இரவு 12.27 மணிக்கு குளிச்சப்பட்டு ஆதிதிராவிடர் தெருவை சேர்ந்த முருகேசன் மகன் நந்தகோபால் வயது 19/2019 என்பவரை அவருடைய உறவினர் வெற்றி செல்வன் அழைத்து வந்து, 05/06/2019 ஆம் தேதி இரவு 10 மணியளவில் குளிச்சப்பட்டு ஆதி திராவிடர் தெருவில் அடையாளம் தெரிந்த 4 நபர்கள் தாக்கியதால் மயக்கம் ஏற்பட்டுள்ளதாக தெரிவித்தார். மேற்படி நந்தகோபாலை பரிசோதித்த போது அவர் ஏற்கனவே இறந்துவிட்டார் என தெரியவந்தது. அவருடைய அங்க அடையாளங்கள் AR No 0978267 இன் படி பதிவு செய்து, சவகிடங்கிற்கு நந்தகோபாலின் உடலை அனுப்பி வைத்து காவல் நிலையத்திற்கு தகவல் கொடுக்கப்பட்டு. இது சம்மந்தமாக நான் வழங்கிய விபத்து பதிவேட்டு நகல் **அ.சா.ஆ.7 ஆகும்.** ஆய்வாளர் என்னை 05/08/2019 ஆம் விசாரித்தார்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:**

மேற்படி நந்தகோபாலை அழைத்து வந்த வெற்றிசெல்வன் மேற்படி நந்தகோபாலை நான்கு ஆண் நபர்கள் தாக்கியதாக சொல்லியுள்ளார் என்றால் சரிதான். தெருவில் எந்தயிடத்தில் சண்டை நடந்தது என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். மருத்துவ விதிகளின் படி ECG எடுப்பதற்கு முன்பு CPR சிகிச்சை கொடுக்க வேண்டும் என்றால் அந்த நோயாளியின் நிலமையை பொறுத்து எடுக்கப்படும். மேற்படி நந்தகோபால் காவல் நிலைய குறிப்பாணையுடன் வரவில்லை.

ஒப்பம்(xxxxxx)

Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him/her to be Correct.

ஒப்பம்(xxxxxx)
Additional District Judge,
Fast Track Court, Kumbakonam.

**/உண்மை நகல்/**
ஒப்பம்(xxxxxx)
Additional District Judge,
Fast Track Court, Kumbakonam.